பிரஸார் பாரதி
அகில இந்தியவானொலி, சென்னை- 4

28 05 2024 — 6 30
செவ்வாய்கிழமை — மாலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

- ஊழலில் ஈடுபடுபவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் என்பதில் பிஜேபி உறுதியுடன் இருப்பதாக அக்கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
- குறைந்தபட்ச ஆதரவு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்நிறுத்தி போராட்டம் நடத்திய விவசாயிகள் மீது பிஜேபி அடக்குமுறையை கையாண்டதாக காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜூன கார்கே குற்றம்சாட்டியுள்ளார்.,
- தமிழகத்தில் குடும்ப அட்டைதாரர்கள் இம்மாதத்திற்கான பாமாயில் மற்றும் துவரம் பருப்பை அடுத்த மாதம் முதல் வாரம் வரை பெற்றுக்கொள்ளலாம் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.
- தென்மேற்குப் பருவமழை கேரளாவில் அடுத்த மூன்று அல்லது நான்கு நாட்களில் தொடங்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- சிங்கப்பூர் ஓப்பன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் ஏழாவது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவுக்கான பிரச்சாரம் நாளைமறுநாள் முடிவடையவுள்ள நிலையில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி ஜார்க்கண்ட் மாநிலம் தும்கா-வில் தேர்தல் பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேசினார்.

ஊழலில் ஈடுபடுபவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மக்களவைத் தேர்தலுக்குப் பின் தீவிரப்படுத்த பிஜேபி உறுதியுடன் இருப்பதாக அவர் தெரிவித்தார்,

ஜார்க்கண்ட் மாநிலத்தில், ஜார்க்கண்ட் முக்திமோர்ச்சா – காங்கிரஸ் ஆகிய கட்சிகள் அதிக அளவில் ஊழலில் ஈடுபட்டதாக அவர் குறிப்பிட்டார்.

மாநில அமைச்சர்கள், அதிகாரிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து பெருமளவிலான பணம் மத்திய புலனாய்வு அமைப்பினரின் சோதனையின்போது கிடைத்துள்ளதாக அவர் கூறினார்.

காங்கிரஸ் மீதும் ஜே எம் எம் கட்சி மீதும் மக்கள் அதிருப்தியில் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஊழல் மற்றும் பொய்யான வாக்குறுதிகளை அளிப்பதில் காங்கிரஸ் மற்றும் ஐ என் டி ஐ கூட்டணியினர் செயல்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இவர்களின் பிடியிலிருந்து நாட்டை மீட்கவேண்டும் என்பதில் தங்கள் கட்சி உறுதியுடன் இருப்பதாக அவர் கூறினார்.

ஜாக்கண்ட் முக்திமோர்ச்சா தலைமையிலான கூட்டணி அரசு ஊடுறுவலை தடுக்காமல் பழங்குடியின மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தி வருவதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

பஞ்சாப் மாநிலம் அம்ரிட்ஸரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜூன கார்கே, விவசாய கருவிகளுக்கு சரக்கு மற்றும் சேவை வரியிலிருந்து விலக்கு அளிக்க ஐ என் டி ஐ கூட்டணி முயற்சி மேற்கொள்ளும் என்றார்.

தில்லியில் தங்களது கோரிக்கையை முன்னிறுத்தி போராட்டம் நடத்திய விவசாயிகள் மீது பிஜேபி தலைமையிலான அரசு அடக்குமுறையை கையாண்டதாகக் குற்றம்சாட்டினார்.

பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களில் சாகுபடி பரப்பு குறைவாக உள்ள பகுதிகளில் அதிக அளவு உணவு தானியா உற்பத்தி செய்து சாதனை படைத்திருப்பதாக அவர் கூறினார்.

அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான குறைந்தபட்ச ஆதரவு விலையை உறுதி செய்ய அக்கட்சி தவறிவிட்டதாக அவர் குற்றம்சாட்டினார்.

விவசாயிகளின் விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை சட்ட ரீதியாக உறுதி செய்யப்படும் என்றும், எழை எளிய மக்களுக்கு பத்து கிலோ உணவு தானியம் விலையின்றி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பஞ்சாபில் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ள இளைஞர்களை மீட்பதற்கு காங்கிரஸ் கூட்டணி பாடுபடும் என்றும் திரு மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்தார். எல்கே /ச

தில்லி / 39

கோவையில் உள்ள கொடிசியா வளாகத்தில் ராணுவ தளவாடங்கள், உள்நாட்டில் தயாரிக்கப்டும் பாதுகாப்புத்துறை உபரணங்கள் தொடர்பான கண்காட்சி இன்று தொடங்கியது.

நாளை வரை நடைபெறும் இந்த கண்காட்சியை பார்வையிட பொதுமக்கள் இலவசமாக அனுமதிக்கப்படுவார்கள் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - ஹரிகரன் ) -49-- செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழகத்தில் பொது விநியோக திட்ட குடும்ப அட்டைதாரர்கள் இம்மாதத்திற்கான பாமாயில் மற்றும் துவரம் பருப்பை அடுத்த மாதம் முதல் வாரம் வரை பெற்றுக் கொள்ளலாம் என மாநில உணவுப்பொருள் வழங்கல் துறை தெரிவித்துள்ளது.

குடும்ப அட்டைதாரர்களின் நலனை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

குடும்ப அட்டைகளுக்கான இம்மாத ஒதுக்கீட்டிற்கான அனைத்து பொருட்களும் மாத இறுதிக்குள் கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடத்தை விதிகள் காரணமாக பாமாயில் மற்றும் துவரம் பருப்புக்கான ஒப்பந்தப்புள்ளிகள் மீதான முடிவுகளை மேற்கொண்டு இவற்றை கொள்முதல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தென்மேற்கு பருவமழை கேரளாவில் அடுத்த அடுத்த மூன்று நான்கு நாட்களில் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த மூன்று நாட்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாகவும் கூறினார்.

இருப்பினும் தமிழகத்தில் அடுத்த மூன்று நாட்களுக்கு ஓரிரு இடங்களில் வெப்பம் இயல்பைவிட சற்று அதிகரித்து காணப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வங்கக்கடல் மற்றும் தெற்கு கேரள கடலோரப் பகுதிகளில் அடுத்த நான்கு நாட்களுக்கு சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளில் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்றும் திரு செந்தாமரைக் கண்ணன் அறிவுறுத்தினார்.

இதனிடையே கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

48 அடி கொள்ளளவு கொண்ட பேச்சிப்பாறை அணையில் நீர்மட்டம் 45 அடிக்கும் கூடுதலான உள்ளது.

தொடர்மழை காரணமாக பரளியாறு, தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பொருக்கு ஏற்பட்டுள்ளது.

குளித்துறை தாமிரபரணி ஆற்றின் தரைப்பாலத்தை தண்ணீர் மூழ்கடித்துச் செல்வதால் அப்பகுதில் தொடர்ந்து பத்தாவது நாளாக போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் மழை குறைந்துள்ளதை அடுத்து மணிமுத்தாறு அருவியில் குளிப்பதற்கும், மாஞ்சோலை சூழல் சுற்றுலா செல்வதற்கும் மாவட்ட நிர்வாகம் அனுமதி அளித்துள்ளது.

[]<<<>>>[]

கரூர் மாவட்டத்தில் வேளாண் பணிகளுக்கு ட்ரோன் மூலம் மருந்து தெளிக்கும் பணியினை ஆட்சியர் திரு தங்கவேல் இன்று நேரில் பார்வையிட்டார்.

[]<<<>>>[]

சிவகங்கை மாவட்டத்தில் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை சரணாலயத்தில் புலிகள் கணக்கெடுக்கும் பணி இன்று தொடங்கியது.

[]<<<>>>[]

திண்டுக்கல் மாவட்டம் பழனி மலை அடிவார பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்பு கடைகளை நீதிமன்ற உத்தரவின்படி நகராட்சி அதிகாரிகள் இன்று அகற்றினர்.

[]<<<>>>[]

மயிலாடுதுறையை அடுத்த தருமபுரம் ஆதீனததில் பட்டண பிரவேசம் விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் இன்று நடைபெற்றது.

[]<<<>>>[]

திருப்பூர் மாவட்டம் பெரமாநல்லூர் அருகே 239 மூட்டைகளிலிருந்து ஆயிரத்து 658 கிலோ போதைப்பொருளை காவல்துறையினர் கைப்பற்றியுள்ளனர். இது தொடர்பாக ஏழு பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

[]<<<>>>[]

தென்காசி மாவட்டம் குற்றாலம் மலைப்பகுதிகளில் மழை வெள்ளம் ஏற்படும்போது முன்னெச்சரிக்கையாக தகவல் தெரிவிக்க வனத்துறையினர் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

சிங்கப்பூர் ஓப்பன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது,

இப்போட்டியில் இந்தியாவின் முன்னணி வீரர்களான லக்ஷ்ய சென், ஸ்ரீகாந்த், பிவி சிந்து உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

இன்று நடைபெற்ற முதல் சுற்று ஒற்றையர் பிரிவு ஆட்டங்களில் இந்தியாவின் பிரியன்ஷு ரெஜாவத், அகர்ஷி காஸியப் ஆகியார் தோல்வியடைந்தனர்.

இரட்டையர் பிரிவில் ரெங்கிரெட்டி - ஷிராக்ஷெட்டி இணை, ருதபர்ன பாண்டா- ஸ்வேதா பர்னா பாண்டா இணை மற்றும் ஆசித் சூரியா – அம்ருதா பிரமுதேஷ் இணைகள் தோல்வியடைந்தன.

**[]<<<>>>[]**

தென்கொரியாவின் சாங்வோனில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீவல்லி ராஷ்மிகா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 7-6, 6-2 என்ற செட் கணக்கில் தைவான் வீராங்கனையை வென்றார்.